செய்தி வெளியீடு எண்: 407 நாள்: 13.07.2012

# செய்தி வெளியீடு

குற்றவாளிகளை சிறையில் அடைத்து வைத்து அவர்கள் இனிமேலும் குற்றமிழைக்கா வண்ணம் தடுப்பதுடன், அவர்களை சீர்திருத்தி, அவர்கள் மீண்டும் சமுதாயத்தில் இணைந்து மறுவாழ்வு தொடங்குவதற்கு ஏதுவாக தேவையான பயிற்சிகளையளிக்கும் பணியினை சிறைத்துறை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான தமிழக அரசு, சிறைவாசிகளின் நலனுக்கான பல சீர்திருத்த திட்டங்களையும், சிறைச்சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னையிலுள்ள புழல் சிறையில் 45 லட்சம் ரூபாய் செலவில் நவீன அடுமனை (Bakery Unit) அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த நவீன அடுமனை அமைக்க, இயந்திர தளவாடங்களுக்காக 30 லட்சம் ரூபாயும், உள்கட்டமைப்பிற்காக 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், மின்சார சாதனங்களுக்காக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், சமையலறை சாதனங்களுக்காக 1 லட்சம் ரூபாயும், நடைமுறை மூலதனத்திற்காக 2 லட்சம் ரூபாயும் செலவழிக்கப்படும். இதன் மூலம் சிறைவாசிகளால் தயாரிக்கப்படும் பல்வேறு சுவையான அடுமனை சிற்றுண்டிகள் வெளிச் சந்தையில் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் கிடைக்கும் லாபத்திலிருந்து 20 விழுக்காடு சிற்றுண்டிப் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்ட சிறைவாசிகளின் கணக்கிலும், 20 விழுக்காடு அரசு கணக்கிலும், 20 விழுக்காடு சிறைப்பணியாளர் நலநிதியிலும் மீதமுள்ள 40 விழுக்காடு தமிழ்நாடு சிறைத்துறையின் உற்பத்தி பொருட்கள் நிதியிலும் வரவு வைக்கப்படும். இதற்காக தமிழ்நாடு சிறைத்துறை உற்பத்திப் பொருட்கள் நிதியம் (Tamil Nadu Prison Department Manufacture of Goods Fund) மற்றும் தமிழ்நாடு சிறைத்துறை பணியாளர்கள் நல நிதியம் (The Tamil Nadu Prison Staff Welfare Fund) ஆகியவற்றை ஏற்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த நடவடிக்கைகள், சிறைவாசிகளிடையே ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடும் எண்ணத்தை ஏற்படுத்துவதோடு, அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு வெளியே செல்லும் பொழுது சுய தொழில் தொடங்குவதற்கு உதவுவதாகவும் அமையும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :-13.7.2012.